Arimā Nōkku

# அரிமா நோக்கு

3:3 அக்டோபர் 2009

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு
3:3 அக்டோபர் 2009

மேரி கொரெல்லி
- *வ. ஜெயதேவன்* 03
இல்லாத காலமும் இருக்கின்ற கலைகளும் - *சா. கந்தசாமி* 04
People's Poet
- *Arignar Anna* 09
சங்க இலக்கியம் காட்டும் வல்லம்
- *ஜெ. அரங்கராஜ்* 12
இலக்கிய வரலாற்று நூல்களும் சில நெருடல்களும்
- *ந. முருகேசன்* 16
மா. இராசமாணிக்கனார்
- *த. வசந்தாள்* 19
Featuring Phonological Deficits in Dyslexics
- *R. Lalitha Raja* 22
இந்திரனின் இடப்பெயர்
- *கி. இராசா* 26
Brief Notes on the Tamil Language
- *Rev.Henry R. Hoisington* 30
குடந்தையில் கல் நாதஸ்வரம்
- *க. இராஜசேகரன்* 34
சங்க இலக்கியத்தில் ஞாயிறு
- *இரா. தமிழடியான்* 36
நம் நாட்டுச் செல்வரும் நாகரீகமும்
- *அ. வரதநஞ்சையபிள்ளை* 41
மாதரியல்பு
- *எஸ். சாமிநாதையர்* 43
ஈழநாடும் தமிழ்ச்சங்கமும்
- *ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை* 45
வள்ளுவர் கழிந்த பகல் நோய்
- *ப. கொழந்தசாமி* 55
மில்லிசென்ட் கேரெட் பாசெட்
- *இரா. பிரேமா* 56
வினா-விடை
- *சோ. ந. கந்தசாமி* 59
மலேசியாவில் பேச்சுத் தமிழ்
- *மு. பரமசிவம்* 65
என் அருமை ஈழமே!
- *ய. மணிகண்டன்* 67

மற்றும்
நூல், ஆய்வாளர் அறிமுகம், கவிதைகள், துணுக்குகள்

# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## ஒன்பதாவது உலகத் தமிழ்மாநாடு (கோவை/2010) - சில குறிப்புகள்

• 1968இல் சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், புறநானூற்றின் *யாதும் ஊரே யாவரும் கேளிர்* என்னும் தொடர் முத்திரைமொழி போலப் பயன்படுத்தப்பட்டது. ஒன்பதாவது உலகத் தமிழ்மாநாட்டிற்கு அவ்வாறு பயன்படத் தக்க இலக்கியத் தொடரைத் தேர்ந்தெடுக்கலாம். எடுத்துக்காட்டு:

*அறிவை விரிவுசெய் அகண்டமாக்கு*
*மானுட சமுத்திரம் நானென்று கூவு* - பாரதிதாசன்
*தேமதுரத் தமிழோசை உலகமெலாம்*
*பரவும் வகை செய்தல் வேண்டும்* - பாரதி
*எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!* - பாரதிதாசன்

• தொல்காப்பியர் அஞ்சல்தலை வெளியிடலாம்.

• செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், உலகளாவிய நிலையில் ஒரு பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழைத் தொடங்கி (ஆங்கிலம், தமிழ் என இரு மொழி ஏடு) அதன் முதல் இதழை உலகத் தமிழ்மாநாட்டில் வெளியிடலாம். செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அச்சுக்கு ஆயத்தப்படுத்தி வரும் தமிழ்ச் செவ்வியல் கால நூல்களை வெளியிடலாம்.

• மாநாட்டில் திரையிட ஒரு குறும்படம் எடுக்கலாம்.

திருக்குறள் ஆராய்ச்சிக்கென இரண்டாவது உலகத் தமிழ்மாநாட்டை ஒட்டிப் பல்கலைக்கழகங்களில் இருக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. அவ்வகையில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழ்கத்தில் தொல்காப்பிய ஆய்வுக்கு எனத் தனி இருக்கை நிறுவலாம். உலகத்தமிழ் மாநாடு நடைபெறும் கோவை மாநகரில் பாரதியார் பல்கலைக்கழகத்தில் பாரதி ஆய்வு இருக்கை நிறுவலாம்.

• அயலகப் பல்கலைக்கழகங்களில் இருக்கும் தமிழ்த்துறைகளை மேம்படுத்தவும். இதுவரை தமிழ்த்துறை இல்லாத சிறந்த பல்கலைக்கழகங்களில் தமிழ்த்துறைகள் தோற்றுவிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளலாம்.

• தலைசிறந்த அயலகத் தமிழறிஞர் ஒருவரை (இலக்கியம், மொழியியல், ஒப்பியல், வகை சார்ந்த வல்லமை உடைய) வருகைதரு பேராசிரியராக மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்திலோ, நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்திலோ பணியில் அமர்த்தலாம்.

• சாகித்திய அகாதெமியின் மொழிபெயர்ப்பு மையம் ஒன்று பெங்களூருவில் இயங்கி வருகிறது. அதுபோன்ற மையத்தைச் சென்னையில் நிறுவுமாறு ஏற்பாடு செய்யலாம். சென்னையில் உள்ள சாகித்திய அகாதெமிக்கிளையைத் தமிழ். மலையாளம் ஆகிய இரு மொழிகளுக்கான செயற்பாடுகளை மேற்கொண்டு இயங்கும் நிறுவனமாக மாற்றலாம். தென்மண்டல மையமாகப் பெங்களூருவில் இருக்கும் சாகித்திய அகாதெமி. கன்னடம், தெலுங்கு ஆகிய இருமொழிகளுக்கான செயல்பாடுகளை மேற்கொள்ளலாம்.

• எண்பதுவயதை எட்டியுள்ள மூத்த தமிழறிஞர்கள் பதின்மரைத் தேர்ந்தெடுத்துச் சிறப்பிக்கலாம். நாற்பத்தைந்து வயதுக்கு உட்பட்ட தலைசிறந்த புலமையாளர், படைப்பாளர்களைத் தேர்ந்தெடுத்துப் (பதின்மரை அல்லது ஐவரைப்) பாராட்டலாம்.

• தந்தைபெரியார், அறிஞர் அண்ணா, முதல்வர் கலைஞர் ஆகியோரின் பொன் மொழிகளைத் தொகுத்து-ஆங்கிலப் பெயர்ப்போடு அச்சிட்டு, மாநாட்டுக்கு வருகை தரும் பேராளர்களுக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் வழங்கலாம் (3 x 100 = 300) மூவர்மொழிகள் - முத்துமொழிகள் முந்நூறு - என்பதுபோல் அத்தொகுப்பிற்குத் தலைப்பு இருக்கலாம். →

• இந்திய அளவில் மிகுந்த சிறப்புடையதாகக் கருதப்படுகிற ஞானபீடப் பரிசுபோல-மிகுதொகை வழங்கும் (இந்தியப் படைப்பாளர்கள் எல்லார்க்கும் உரிய வகையில்) பரிசு ஒன்றை ஏற்படுத்தலாம். அது - கலைஞர்பீடப்பரிசு - கலைஞர் படைப்பாற்றல் விருது என்பதாக அமையலாம்.

• மாநாட்டை ஒட்டி, வருகை புரிவோர் நினைவுப் பொருள்களாக வாங்கிச் செல்ல - வள்ளுவர் கோட்டம், அய்யன் திருவள்ளுவர் சிலை, கண்ணகிசிலை - அண்ணா உருவம் அல்லது நினைவிடம், பெரியார் உருவம் - ஆகியன பதிக்கப்பெற்ற பொருள்களைத் தயாரிக்கலாம் - சட்டை, எழுதுகோல், தேநீர்க்கோப்பை, சிறுகுறிப்பேடுகள் போல. சுருக்கமான தமிழ் இலக்கிய வரலாற்று நூல் ஒன்று (கையேடுபோல) ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியிடலாம். தமிழ்நாட்டு வரலாற்று நூல் ஒன்றும் இவ்வகையில் உருவாக்கி வெளியிடலாம். ♦


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர்*
*(மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்
கா. செல்லப்பன்
இரா. இளவரசு
நா. சுப்பிரமணியன் (கனடா)
பொன். செல்வகணபதி
நா. முத்துக்குமார்
சீதாலட்சுமி (சிங்கப்பூர்)
மு. பரமசிவம் (மலேசியா)
பத்மாவதி விவேகானந்தன்
இரா. பிரேமா
பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும்
அயல் நாடுகளிலும் உள்ள
தமிழியல் அறிஞர்கள்,
பல்கலைக்கழகப்
பேராசிரியர்கள்
மற்றும்
படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்



படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும், மாற்றவும் பதிப்பாளருக்கு உரிமை உண்டு முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து எதனையும் எடுத்தாளலாகாது.


# கட்டணம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/- | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | US $ 500 |

- நிறுவனம்சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் அரிமா நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

## விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்னட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 15,000 |
| உள்ளட்டை | (பல வண்ணங்கள்) | ரூ. 10,000 |
| முழுப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 3,000 |
| அரைப்பக்கம் | (கருமை & வெண்மை) | ரூ. 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*


## அரிமா நோக்கு

4/1083 நேரு நகர்
2 ஆவது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம், சென்னை 600 096
வலைத்தளம்: www. arimaanokku.com
மின் அஞ்சல்: arimaa.nokku@gmail.com
செல்: 9380626448